ஊட்டியின் முதல் ஆணையராக இருந்த ஜான் சல்லிவனால் உருவாக்கப்பட்டது ஊட்டி ஏரி. 1824-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த ஏரி இப்போதும் ரம்மியத்தோடு காட்சி அளிக்கிறது.

ஊட்டி ஏரியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன. சுற்றுலா பயணிகளுக்காக 33 மோட்டார் படகுகள், 17 துடுப்பு படகுகள், 105 மிதி படகுகள் இயக்கப்படுகின்றன. காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை படகு சவாரி செய்யலாம்.

காங்கயம் அருகே வீரசோழபுரம் கிராமத்தில்

எண்ணெய் குழாய் பதிக்க விவசாயிகள் எதிர்ப்பு

■ திருப்பூர்

பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் சார்பில் ஐடிபிஎல் எண்ணெய் குழாய் பதிக்கும் திட்டமானது கோவை, திருப்பூர் மாவட்டங்களில் விவசாய நிலங்கள் வழியாக சுமார் 70 கிலோ மீட்டர் தூரத்துக்கு செயல்படுத்தப் படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், காங்கயத்தை அடுத்த வீரசோழபுரம் ஊராட்சி சிகாரிபுரத்தில் கடந்த 17-ம் தேதி விளை நிலங்கள் வழியாக எண்ணெய் குழாய் பதிக்கும் பணி தொடங்கியது. இதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப் பட்டன.

மேலும், கடந்த 3 நாட்களாக தோட்டத்தில் பந்தல் அமைத்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 4-வது நாளான நேற்று பணிகளைத் தொடங்க அதிகாரிகள் முற்பட்டபோது, பொக்லைன் இயந்திரங்கள் தோண்டிய குழிக்குள் இறங்கி பணிகளை செய்ய விடாமல் விவசாயிகள், பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, போலீஸார் அங்கு வந்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தொண்டாமுத்தூர் தொகுதியில் நிலங்களின் மதிப்பு பூஜ்ஜியம்

எம்எல்ஏ எஸ்.பி.வேலுமணி குற்றச்சாட்டு

■ சென்னை

தொண்டாமுத்தூர் தொகுதியில் சில பகுதிகளில் நிலங்களின் மதிப்பு பூஜ்ஜியமாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதை சரி செய்ய வேண்டும் என்று சட்டப்பேரையில் அதிமுக எம்எல்ஏ எஸ்.பி.வேலுமணி வேண்டுகோள் விடுத்தார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று நேரமில்லா நேரத்தில் தொண்டாமுத்தூர் தொகுதி அதிமுக எம்எல்ஏ எஸ்.பி. வேலுமணி பேசியதாவது:

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் தொகுதிக்கு உட்பட்ட வத்திராயிருப்பு, இருட்டுபள்ளம், நரசிங்கபுரம், சுண்டக்காமுத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஊர்நத்தம் பூர்வீக சொத்து பூஜ்ஜிய மதிப்பீடாக தவறாக பதிவாகி உள்ளது. இதனால் ஏழை எளிய மக்கள் தங்கள் சொத்தை விற்கவோ வாங்கவோ முடியவில்லை. இதற்காக தாலுகா அலுவலகம் சென்றால் காலதாமதம் ஆகிறது. எனவே, இதற்கு தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதற்குபதில் அளித்துபேசிய வருவாய் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், இப்பிரச்சினையை தீர்க்க குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:
repkovai@hindutamil.co.in

4 சிறுமிகளுக்குப் பாலியல் வன்கொடுமை

கிறிஸ்தவ மத போதகருக்கு 4 தூக்கு தண்டனை

போக்சோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு

■ திருநெல்வேலி

பைபிள் வகுப்பு நடத்துவதாகக் கூறி 4 சிறுமிகளைப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில், கிறிஸ்தவ மத போதகருக்கு போக்சோ சிறப்பு நீதிமன்றம் 4 தூக்கு தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், தேவர் குளத்தை அடுத்தமேல இலந்தகுளம் பகுதியைச் சேர்ந்தவர் ஆபிரகாம்(53). கிறிஸ்தவ மத போதகரான இவர், அதே பகுதியில் உள்ள கிறிஸ்தவ சபையில் பணியாற்றி வந்தார். மேலும், தனது வீட்டுக்குச் சிறுமிகளை வரவழைத்து, அவர்களுக்குப் பைபிள் வகுப்புநடத்தி வந்தார். வெளியூர்களில்நடைபெறும் சபை ஊழிய நிகழ்ச்சிகளுக்கு, அந்த சிறுமிகளை அழைத்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில், கடந்த 2022-ம் ஆண்டு பைபிள் வகுப்பு மற்றும் ஊழிய நிகழ்ச்சிகளுக்காக அழைத்து செல்லப்பட்ட 12, 13மற்றும் 8 வயதுடைய ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த 3 சிறுமிகள் உட்பட மொத்தம் 4 சிறுமிகளை, தனது வீட்டில் அடைத்து வைத்துஆபிரகாம் பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் தெரிவிக்கப்பட்டது.

▲ திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பின் ஆபிரகாமை அழைத்துவரும் போலீஸார். படம்: மு.லெட்சுமி அருண்

பாதிக்கப்பட்ட சிறுமிகளின் தாய், திருநெல்வேலிஊரக மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.அதன் அடிப்படையில், போக்சோ சட்டத்தின் கீழ் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வந்தனர்.

மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சண்முகம் தலைமையில், மகளிர் காவல் ஆய்வாளர் ராதா உள்ளிட்ட போலீஸார் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டு, விசாரணை தீவிரப்படுத்தப்பட்டது. விசாரணைக்குப் பின் ஆபிரகாம் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கில் சாட்சிகள் அனைவரும் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில், வழக்கின் இறுதி விசாரணை நிறைவு பெற்றது. இதையடுத்து, இந்த வழக்கில் நீதிபதி சுரேஷ்குமார் நேற்று தீர்ப்பு வழங்கினார்.

மத போதகராகவும் சிறுமிகளின் தந்தை வயதுடையவராகவும் இருந்து கொண்டு, சிறுமிகளுக்குப் பாலியல் வன்கொடுமை செய்து குற்றம் இழைத்துள்ளதால் கடுமையான தண்டனை வழங்கப்படுவதாக தமது தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டார். நான்கு சிறுமிகளைப் பாலியல் வன்கொடுமைசெய்த குற்றத்துக்காக ஆபிரகாமுக்கு 4 தூக்கு தண்டனையும்ரூ.52 ஆயிரம் அபராதமும்விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். மேலும், பாதிக்கப்பட்ட 4 சிறுமிகளுக்கும் தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க தமிழக அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை 17 போக்சோ வழக்குகளில் 17 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதில் 2 பேருக்கு தூக்கு தண்டனையும் 4 பேருக்கு சாகும் வரை ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் விஷ்வேஷ் பா.சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த குற்றவியல் வழக்கறிஞர் கே.பிரபாகரன் கூறியதாவது:

கொலை வழக்குகளில் இரட்டை ஆயுள், மூன்று ஆயுள் சிறை தண்டனைகள் வழங்கப்படுவது போல், இந்த வழக்கில் 4 மரண தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. 4 சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதால், ஒவ்வொரு சிறுமியின் பாதிப்புக்கும் ஒரு மரண தண்டனை என்று கணக்கிட்டு நீதிபதி இத்தீர்ப்பை வழங்கியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பகுதியில் 17 வயது மாணவியைப் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில், பாலியல் குற்றத்துக்கும், கொலைக்கும் என தலாஒரு மரண தண்டனை வீதம் 2 மரண தண்டனை விதித்து தூத்துக்குடி போக்சோ சிறப்பு நீதிமன்றம் இந்த ஆண்டு தீர்ப்பு கூறியிருந்தது.

இவ்வாறு அவர் கூறினார்.

மயங்கி விழுந்த ஆபிரகாம்

நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டதும் ஆபிரகாம் மயங்கி விழுந்தார். உடனே, நீதிமன்ற வளாகத்தில் இருந்த செவிலியர், அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தார். தீர்ப்பையொட்டி ஆபிரகாமின் மனைவி, மகள் ஆகியோர் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர். தீர்ப்பைகேட்டதும் அவர்கள் கதறி அழுதனர். அவர்களை அங்கிருந்த போலீஸார் வெளியே அழைத்துச் சென்றனர்.

▲ கோவை விளாங்குறிச்சி காமாட்சியம்மன் கோயில் திருக்குட நன்னீராட்டு ஐந்தாம் ஆண்டு விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அருளுரை வழங்கிய சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள். (அடுத்த படம்) சிறப்பு அலங்காரத்தில் காமாட்சியம்மன். படங்கள்: ஜெ.மனோகரன்

அவிநாசி அருகே துப்பாக்கி வைத்திருந்த 3 பேர் கைது

■ திருப்பூர்

திருப்பூர் மாவட்டம் அவிநாசி வட்டம் சேவூர் அருகே நம்பியூர் சாலையில் போலீஸார் நேற்று முன்தினம் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வழியாக சந்தேகத்துக்கு இடமான வகையில் வந்த 3 நபர்களை பிடித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டனர். அவர்கள் எவ்வித உரிமமும் ஆவணங்களும் இன்றி, துப்பாக்கி வைத்திருந்தது தெரிய வந்தது. இதுதொடர்பாக, சேவூர் பகுதியைச் சேர்ந்த அருள்குமார் (31), அவிநாசியை சேர்ந்த நிக்சன் ஜோசப் (36), சத்தியமங்கலம் பெரியகள்ளிப்பட்டியைச் சேர்ந்த வெள்ளிங்கிரி(33) ஆகியோரை சேவூர் போலீஸார் கைது செய்தனர்.

நாட்டுக்கோழி பண்ணை நடத்தி ரூ.25 கோடி மோசடி செய்த வழக்கில் 2 பேருக்கு தலா 10 ஆண்டு சிறை

■ கோவை

ஈரோடு மாவட்டம் சித்தோடு பகுதியில் 'கிரீன்லைப் ஃபார்ம்ஸ்' என்ற பெயரில் நாட்டுக்கோழி வளர்ப்பு பண்ணை செயல்பட்டு வந்தது. இந்த நிறுவனத்தின் உரிமையாளர்கள் பெருந்துறையைச் சேர்ந்த விஸ்வநாதன் (40), கவுரிசங்கர் (40) ஆகியோர், இந்நிறுவனத்தில் பொதுமக்கள் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்குமென அறிவித்தனர்.

இதனை நம்பி கோவை, ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் தங்களது சேமிப்புத் தொகையிலிருந்து மொத்தம் ரூ.24 கோடியே 53 லட்சத்து 99 ஆயிரத்தை இந்த நிறுவனத்தில் முதலீடு செய்தனர். ஆனால் அவர்கள் கூறியபடி லாபத்தொகை எதையும் வழங்கவில்லை. தொடர்ந்து காலம் தாழ்த்தி வந்ததால், அந்த நிறுவன உரிமையாளர்கள் மீது முதலீட்டாளர்கள் அளித்த புகாரின் பேரில் ஈரோடு மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் கடந்த 2012-ம் ஆண்டு வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை கோவை நிதி நிறுவன மோசடிகள் மற்றும் வைப்பாளர்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி எம்.என்.செந்தில்குமார், குற்றம்சாட்டப்பட்ட விஸ்வநாதன், கவுரிசங்கர் ஆகியோருக்கு தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், பொதுமக்கள் இழந்த ரூ.24 கோடியே 53 லட்சத்து 99 ஆயிரத்தை அபராதத்துடன் செலுத்தவும் உத்தரவிட்டார்.

சுவாதீன அறிவிப்பு

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-யின் அதிகாரபூர்வ அலுவலராக கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கக் சட்டம் பிரிவு 13(2)ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகளில், விதி 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர்(கள்)/ இணை-கடன்தாரர்(கள்)-களுக்கு **கோரிக்கை அறிவிப்புகளை** அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த **60 நாட்களுக்குள்** அதில் கீழ்காணும் பாக்கித் தொகை அத்துடன் கடனுக்கான வட்டி, செலவுகள், கட்டணங்கள், இதரவை, தொகை செலுத்தும் நாள் வரை மற்றும்/அல்லது உணர்த்துதல் வரை சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.

வ. எண்.	கணக்கு எண்.	கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/அடமானதாரர்	13(2) அறிவிப்பு நாள்/ நிலுவை தொகை (ரூபாயில்) தேதி	நாள்/நேரம் & சுவாதீன வகை
1	33710440000019	1) திரு. ராஜசேகரன், த/பெ. அய்யசாமி, 2) திரு. அய்யாசாமி திருமலை, த/பெ. திருமலை	12.06.2026, 08.06.2026 தேதியில் ரூ.3,51,361.84	19.08.2026 12.45 PM சிம்பொலிக் சுவாதீனம்

கோயம்புத்தூர் தெற்கு பதிவு மாவட்டம், சூலூர் சார்-பதிவு மாவட்டம், முன்னதாக பல்லடம் தாலுகா, தற்போது சூலூர் தாலுகா, அப்பநாயக்கன்பட்டி கிராமம், நத்தம் எஸ்.எப்.எண்.483/14, எஸ்.எண்.483/14 இந்த நிலம் வீட்டு சைட்டுகளாக மாற்றப்பட்டது, இதன் பட்டா எண். 270, தற்போது பட்டா எண். 695 பரப்பு 420 சதுர அடி நிலம் பின்வரும் **எல்லைகள் மற்றும் அளவுகள் : கிழக்கு:** எஸ்.எப்.எண்.483/16 மற்றும் தெற்கு வடக்கு சாலை, **வடக்கு:** பழனி வீடு, **தெற்கு:** கிழக்கு மேற்கு சாலை, **மேற்கு:** எஸ்.எப்.எண். 483/17 மற்றும் சாதன் வீடு. இதன் மத்திய, கிழக்கு மேற்கு தெற்கு பக்கம்: 17 அடி 6 அங்குலம், தெற்கு வடக்கு கிழக்கு பக்கம் : 44 அடி 9 அங்குலம், கிழக்கு மேற்கு வடக்கு பக்கம்: 17 அடி 6 அங்குலம், தெற்கு வடக்கு மேற்கு பக்கம்: 24 அடி 3 அங்குலம். மொத்தம் 420 சதுர அடி அல்லது 39 சதுர மீட்டர் நிலம் மற்றும் டைல்டு வீடு மற்றும் கதவுகள், ஜன்னல்கள், பிட்டிங்ஸ், உதிரிகள், மின்சாரம் இணைப்பு மற்றும் அதன் வைப்பு மற்றும் வழக்கமான பாதை உரிமைகள் மற்றும் மற்ற அனைத்து வசதிகள் உட்பட. சொத்து வரி அசெஸ்மெண்ட் எண். 2024-2025/11/18/1/1/288. மேற்கூறிய சொத்து அப்பாநாயக்கன்பட்டி கிராமம் பஞ்சாயத்து எல்லைகளுக்குட்பட்டது.

மேற்படி பாக்கித்தொகையை மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள்/ ஜாமீன்-தாரர்கள்/அடமானதாரர்கள் செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்கு தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை மேற்குறிப்பிட்டுள்ள தேதியன்று **சுவாதீனம்** செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட கடன்-தாரர்கள்/ இணை-கடன்தாரர்கள்/ ஜாமின்-தாரர்கள்/ அடமானதாரர்கள் குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்துக்கள்/அடமான சொத்துக்கள் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு** செலுத்தப்பட வேண்டிய பாக்கித்தொகை மற்றும் கடனுக்கான வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

இடம் : கோயம்புத்தூர்
நாள் : 20.08.2026

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்கலம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
CIN : L22121TN1979PLC007799
பதிவு அலுவலகம்: 67, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி: 044-22354415-17. மின்னஞ்சல்: invest_grievances@tnpl.co.in
இணையதளம்: www.tnpl.com

அறிவிப்பு

பொருள்: காகித வடிவில் உள்ள பத்திரங்களின் உரிமை மாற்றம் மற்றும் மின்னணு வடிவமாக மாற்றும் கோரிக்கைகளை மீண்டும் சமர்ப்பிப்பதற்கான சிறப்பு அவகாசம்

இந்திய பங்குச் சந்தை ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை வாரியம் சுற்றறிக்கை எண் SEBI/HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026, நாள் **30 ஜனவரி 2026** என்பதன் அடிப்படையில், **01 ஏப்ரல் 2019**க்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும். ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் / செயல்முறைப் பிழைகள் / அல்லது பிற காரணங்களால் நிராகரிக்கப்பட்டதோ, திருப்பி அனுப்பப்பட்டதோ, அல்லது பரிசீலிக்கப்படாமலிருந்ததோ ஆகிய காகித வடிவிலுள்ள பங்குகளின் மாற்றச் சான்னங்களை, பங்குதாரர்கள் சமர்ப்பிக்க அல்லது மறுசமர்ப்பிக்க வசதியளிக்கும் நோக்கில், **05 பிப்ரவரி 2026 முதல் 04 பிப்ரவரி 2027 வரை (ஒரு வருட காலப்பகுதிக்காக) ஒரு சிறப்பு அவகாசக் காலம்** வழங்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சிறப்பு சாளர காலத்தில் பங்குதாரர்கள் தங்கள் முழுமையான விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்கலாம் மற்றும் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரை (RTA) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அதாவது:

கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்,
அலகு: தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் அண்ட் பேப்பர்ஸ் லிமிடெட்,
சுப்பிரமணியன் கட்டிடம், 5வது தளம், எண்.1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை - 600 002.
தொலைபேசி: 044-40020700 / 741 / 780. கேள்விகள்: www.wisdom.cameoindia.com

பங்குதாரர்கள் தொடர்புடைய இந்திய பங்குச் சந்தை ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை வாரியம் சுற்றறிக்கை, தகுதி அளவுகோல்கள் மற்றும் நடைமுறை விவரங்களை நிறுவனத்தின் வலைத்தளமான www.tnpl.com இல் அணுகலாம். மேலும் தகவலுக்கு அல்லது தெளிவுபடுத்தலுக்கு, பங்குதாரர்கள் நிறுவனத்தை invest_grievances@tnpl.co.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 20.08.2026
இடம் : சென்னை

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திற்காக
Sd/-
அனுராதா பொன்ராஜ்
நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி

செ.ம.தொ.இ / 719 / வரைகலை / 2026

பிரிக்கால் லிமிடெட்
(CIN:L34200TZ2011PLC022194)
பதிவு அலுவலகம்: 109, ரேஸ் கோர்ஸ், கோயமுத்தூர் - 641 018
தொலைபேசி: +91 422 4336000 மின்னஞ்சல் : cs@pricol.com
வலைதளம்: www.pricol.com

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

காகித வடிவிலான பங்குகள் தொடர்பான பரிமாற்றக் கோரிக்கைகள் மற்றும் மின்னணு வடிவமாக்குதலுக்கான சிறப்பு சாளரம்

ஜனவரி 30, 2026 தேதியிடப்பட்ட செபி சுற்றறிக்கை எண் HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026-ன் படி, பங்குதாரர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுவது என்னவெனில், 01 ஏப்ரல் 2019 க்கும் முன்பு விற்கப்பட்ட / வாங்கப்பட்ட காகித வடிவிலான பத்திரங்களின் மாற்றம் மற்றும் மின்னணு வடிவமாக்குதலுக்கான சிறப்பு சாளரம் 05 பிப்ரவரி 2026 முதல் 04 பிப்ரவரி 2027 வரை ஒரு வருட காலத்திற்கு திறக்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பு புதியதாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கும், முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஆவண குறைபாடு, நடைமுறை குறைபாடு அல்லது பிற காரணங்களால் நிராகரிக்கப்பட்ட, திருப்பி அனுப்பப்பட்ட அல்லது பரிசீலிக்கப்படாத மற்ற விண்ணப்பங்களுக்கும் பொருந்தும். மாற்றத்திற்காக சமர்ப்பிக்கப்படும் பங்குகள் மின்னணு வடிவில் மட்டுமே செயலாக்கப்படும். மேலும், மாற்றம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அவை 'லாக்-இன்' கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படும். பங்குதாரர்கள் தேவையான ஆவணங்களை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் இந்த வாய்ப்பை பெறலாம்: இன்டெக்ரேடட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சேர்விசெஸ் பிரைவேட் லிமிடெட், இரண்டாம் தளம் "கென்செஸ் டவர்ஸ்", எண்:1, ராமகிருஷ்ணா வீதி, நார்த் உஸ்மான் ரோடு, தி நகர், சென்னை – 600017, போன் : 044-28140801-03. இ- மெயில்:einward@integratedindia.in. போன்: 044-28140801-03,
இ-மெயில்:einward@integratedindia.in.

20 ஆகஸ்ட் 2026
கோயமுத்தூர்

பிரிக்கால் லிமிடெட்டிற்காக
த.கெ.தமிழன்பன்
நிறுவன செயலாளர்

படிவம் A - பொது அறிவிப்பு

இந்திய கடன் தீர்க்க வகையற்றோர் மற்றும் நொடிப்பு நிலை வாரிய (பெருநிறுவன நபர்களுக்கான நொடிப்பு நிலை தீர்மான நடைமுறைகள்) விதிகள் 2016 ன் விதி 6 ன் கீழ்

கங்கோத்ரி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்
நிறுவனத்தின் கடன் வழங்கியவர்கள் கவனத்திற்கு

தொடர்புடைய விவரங்கள்		
1.	பெருநிறுவன கடனாளர் பெயர்	**கங்கோத்ரி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்**
2.	பெருநிறுவன கடனாளர் நிறுவன இணைப்பு தேதி	26-07-1989
3.	எந்த அதிகாரத்தின் கீழ் பெருநிறுவன கடனாளர் துவக்கம்/பதிவு	நிறுவனங்கள் பதிவாளர் - கோயம்புத்தூர். தமிழ்நாடு. நிறுவன சட்டம் 1956 ன் கீழ்
4.	பெருநிறுவன அடையாள எண்/ பெருநிறுவன கடனாளரின் வரையறு நிலுவை உட்பட்ட அடையாள எண்	L17115TZ1989PLC002491
5.	பெருநிறுவன கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (ஏதேனும் இருப்பின்) முகவரி	25, 25-A, வெங்கடாசலம் கோ-ஆபரேட்டிவ் காலனி. ஆர்.எஸ்.புரம். கோயம்புத்தூர். தமிழ்நாடு - 641002.
6.	பெருநிறுவனக் கடனாளரின் நொடிப்புநிலை துவங்கும் தேதி	07-08-2026 (உத்தரவு நகல் பெறப்பட்ட நாள் 19.08.2026)
7.	நொடிப்புநிலை தீர்மான நடைமுறைகள் முடிவடையும் உத்தேச தேதி	03-02-2027
8.	கலைப்புச் செயல்முறையாளராக செயல்படும் நொடிப்புநிலை தொழில் முறையாளரின் பெயர் மற்றும் பதிவு எண்	**G. குணசேகரன்** IBBI/IPA-001/IP-P00681/2017-2018/11178
9.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட இடைக்கால கலைப்புச் செயல் முறையாளரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	36. இந்து நகர். விளாங்குறிச்சி சாலை. விளாங்குறிச்சி அஞ்சல் . கோயம்புத்தூர் - 641035 cagunasekar@yahoo.com
10.	தொடர்புக்கான கலைப்பபுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	36. இந்து நகர். விளாங்குறிச்சி சாலை. விளாங்குறிச்சி அஞ்சல் . கோயம்புத்தூர் - 641035 cirp.gangotritextiles@gmail.com
11.	உரிமைக் கோரல்கள் சமர்ப்பிக்க கடைசி தேதி	02.09.2026 (உத்தரவு கிடைக்கவெற்ற நாளிலிருந்து 14 நாட்களுக்குள்)
12.	இடைக்கால தீர்மானத் தொழில் முறையாளர் நிர்ணயித்தவாறு பிரிவு 21 ன் உப பிரிவு 6A உப்பிரிவு b யின் கீழ் கடன் வழங்குநர்களின் வகைகள்	பொருந்தாது (NA)
13.	கடனாளர்களின் வகுப்பு ஒவ்வொரு வகுப்பிலும் கடனாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக சட்டப்படி அடையாளப்படுத்தப்பட்ட இடைநிலை தீர்மானத் தொழில் முறையாளர் மூன்று பெயர்கள்	பொருந்தாது (NA)
14.	1. தொடர்புடைய படிவங்கள் 2. அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் விபரங்கள் கிடைக்கும் இடம்	a) https://ibbi.gov.in/home/downloads b) பொருந்தாது (NA)

மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத்தீர்ப்பாயத்தின் சென்னை II அமர்வு CP(IBC)/310(CHE)/2025 வழக்கில் **கங்கோத்ரி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்** நிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கைகளை **07.08.2026** அன்று துவங்க அறிவிப்பு வெளியிடப்டுள்ளது. (உத்தரவு நகல் கிடைக்கப் பெற்ற நாள் **19.08.2026**)

கங்கோத்ரி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் கடன் வழங்கியவர்கள், தங்கள் உரிமைகோரல்களை. உரிய ஆதாரங்களுடன். மேலே குறிப்பிடப்பட்டுள்ள 10 ஆம் எண் வரிசைக்குரிய முகவரியில் உள்ள கலைப்புச் செயல்முறையாளரிடம். **02.09.2026** அன்று அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிதிசார்ந்த கடன் வழங்கியவர்கள் தங்கள் உரிமைகோரல்களை ஆதாரத்துடன் மின்னணு வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்கியவர்களும் உரிமைகோரல்களை ஆதாரத்துடன் நேரடியாகவோ, அஞ்சல் மூலமாகவோ அல்லது மின்னணு வாயிலாகவோ சமர்ப்பிக்கலாம்.

வரிசை எண் 12-ல் பட்டியலிடப்பட்டுள்ள வகுப்பைச் சேர்ந்த ஒரு நிதிசார் கடன் வழங்குநர். அந்த வகுப்பின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாகச் செயல்பட வரிசை எண் 13-ல் பட்டியலிடப்பட்டுள்ள முன்று நொடிப்பு நிலை தொழில்முறையாளர்களில் தனது விருப்பமானவரை படிவத்தில் (Form CA) குறிப்பிட வேண்டும். (தற்போதைய வழக்கில் பொருந்தாது).

தவறான அல்லது தவறாக வழிநடத்தும் கோரிக்கை ஆதார